# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2395/06 - 2024 ජූලි මස 29 වැනි සඳුදා - 2024.07.29

2395/06 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KTS/LAN/NY-J/54/10/05/2019.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/17/2019/D/412.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தற்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | | |
|---|---|---|
| ஆரம்ப வரைபட இல. | : | CM 910392 |
| கிராமம் | : | கரம்பன் |
| கிராம அலுவலர் பிரிவு | : | J/54, கரம்பன் மேற்கு |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை. |
| மாவட்டம் | : | யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : | வடக்கு மாகாணம் |
| நோக்கம் | : | இலங்கை கடற்படையின் கஞ்சதேவ பிரிவிற்கான பாதுகாப்பு வலயம் 'C' அமைந்துள்ள காணி |

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: ஊருண்டி மற்றும் இதினியோட ஊருண்டி; விபரம்: தோட்டம் மற்றும் ஐந்து நிரந்தரக் கட்டடங்கள்; உரிமை கோருபவர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.4047 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

களின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திருமதி மஞ்சுளாதேவி சதீசன்,
பிரதேச செயலாளர்
ஊர்காவற்றுறை.

பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை,
2024, யூலை 26.

EOG 07 - 0276

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DSWE/LND/2/F1/47.

2024, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய 2375/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் III ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்ட எனது சமர் இலக்கம் DSWE/LND/2/F1/47 ஆகும். 2024, மாச்சு மாதம் 06 ஆந் திகதிய அறிவித்தலின்படி குறிப்பிடப்பட்ட திகதி, நேரம், நஷ்டஈடு கோரும் திகதியும் கீழே குறிப்பிடும் முறைப்படி இத்தால் திருத்தம் செய்கின்றேன்.

9 ஆம் பிரிவு உரிமை சமர்ப்பித்தல் திகதியும் நேரமும் 2024.09.27 மு.ப. 10.00

உரிமை கோருதல் சமர்ப்பிக்க வேண்டிய திகதி 2024.09.20

ஐ. ஆர். கே. வித்தாரன,
பிரதேச செயலாளர்
வீரகெட்டிய.

பிரதேச செயலகம்,
வீரகெட்டிய,
2024, யூலை 23.

EOG 07 - 0277